1993 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 53, திரு. கு. தங்கமுத்து, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்

53—

தஞ்சாவூர் மாவட்டத்தில் செயற்கைமுறை நெல் உலர்த்தும் ஆலை ஏற்படுத்தல்

*9475—திரு. கு. தங்கமுத்து :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் அறுவடை காலங்களில் அதிகமாக மழை பெய்வதால் நெல் ஈரப்பதத்தோடு இருப்பதைத் தடுக்க செயற்கை முறையில் நெல் உலர்த்தும் ஆலையை அமைத்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டத்தில் உள்ள நடுவர் கிராமத்தில் இவ்வாலை அமைக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செயற்கை முறையில் நெல் உலர்த்தும் ஆலையை அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை, நாகை-காயிதே மில்லத் மாவட்டங்களில் அறுவடைக் காலங்களில் குறிப்பாக, குறுவை அறுவடைக் காலங்களில் தொடர்ந்து அடைமழை பெய்கின்றபோது நெல் வயல்களில் முளைத்து விடுகிறது. அதுபோல் அறுவடை செய்த தற்குப் பின்னாலும், நெல்லை கொள்முதல் நிலையங்களில் சேர்ப்பதற்கு முன்னாலும் முளைத்து விடுகிறது. எனவே, இந்த அறுவடை செய்யப்பட்ட நெல்கள் முளைப்பதை தவிர்ப்பதற்காக ஈரப்பதத்தை உலர்த்துகின்ற வகையில், செயற்கை முறையில் நெல் உலர்த்தும் ஆலையை, அரசு கவனத்திலே கொண்டு உருவாக்கிக் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆலைகளை நடத்தி வருகின்றது. அப்படிப்பட்ட

நவீன அரிசி ஆலைகளில் செயற்கை முறையில் நெல் உலர்த்தும் இயந்திரங்கள் 20 இயங்கிக் கொண்டு இருக்கின்றன. அதுபோக, அங்கே மழைக் காலங்களில் தங்கிப் போகின்ற, நெல்லை உடனடியாக வெளி மாவட்டங்களுக்கு அனுப்பிவைத்து அந்த மாவட்டங்களில் அரைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்து, வருகிறோம்.

முற்பகல் 10.45

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நடைமுறைகள், செயல்முறைகள் இருந்தாலும், இந்த ஆண்டு கண்கூடாகப் பார்க்கின்ற நிலை இருந்தது. நெல் அறுவடை ஆவதற்குப் பின்னால் நெல்லைக் கொள் முதல் செய்கின்ற நிலையங்கள் நெல்லை விற்கிற பொழுது கூட, கிட்டங்கியில் சேர்த்து வைக்கின்ற பொழுதுகூட குறிப்பிட்ட சதவீதம் முளைத்துப் போகின்ற தன்மை இருந்தது. ஆகவே, அதை மனத்திலே கொண்டு, இப்படிப்பட்ட சூழ்நிலை உருவா காமல், நெல் முளைத்து விடாமல் பாதுகாக்கின்ற அளவிற்கு இது இன்னும் அதிகரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நெல்லை வாங்கியவுடன் எவ்வளவு விரைவாக அரைக்க முடியுமோ அவ்வளவு விரைவாக அரைப்பதற்கு எல்லா நடவடிக்கைகளையும் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக்கழகம் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னால் உருவாக்கப்பட்ட நெல் உலர்த்தும் ஆலை கள் இப்பொழுது வீணாகக் கிடக்கின்றன. அந்த ஆலைகளை யாவது சீர் செய்து, அப்படி மழைக் காலங்களில் தேக்கம் அடை கின்ற நெல்லை உலர்த்துவதற்கு ஆவன செய்வதற்கு அரசுமுன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 19–67–68 ஆம் ஆண்டுகளில் இந்திய உணவுக் கழகம் 27 இடங்களில் நெல் உலர்த்தும் இயந்திரங்களை அன் றைக்கு அவர்கள் துவக்கினார்கள். அது சரியாகப் பயன்படுத் தப்பட முடியாத காரணத்தால் அவைகளைத் தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு அவர்கள் விற்று விட்டார்கள் அதைத்தான் எடுத்து அவைகளிலே சில மாறுதல்களைச் செய்து இப்பொழுது நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.